மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.67/2021</u>

2025ம் ஆண்டு நவம்பர் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜேசுதாஸ் ரத்னராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>11.11.2025 வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ஜேன் எமிலியா எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள போத்தனூரில் வசித்து வருகிறார். அவர் எத்தனை ஆண்டுகளாக போத்தனூரில் வசித்து வருகிறார் என்றால் சுமார் 50 ஆண்டுகளாக வசித்து வருகிறார். ஜேன் எமிலியா என்னுடைய மூத்த சகோதரி என்றால் சரிதான். ஜேன் எமிலியா திருமணத்தின் போது திருமண பத்திரிக்கை அச்சடிக்கப்பட்டதா என்றால் ஆமாம். அந்த அச்சடிக்கப்பட்ட திருமண பத்திரிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் அது எனக்கு தெரியாது.

2. சாமிதுரை எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் காங்கேயம் களிமேட்டை சார்ந்தவர். சாமிதுரையின் பெற்றோர் மற்றும்

உடன்பிறந்தவர்கள் இருந்தார்களா என்றால் அனைவரும் இருந்தார்கள். சாமிதுரையின் சகோதர சகோதரிகள் யாரையாவது இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்பதை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாமிதுரை என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் திருமணத்தின்போது காங்கேயம், படியூரில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.

3. தற்போது இருந்து எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்றால் 1984 இல் அவர் ஆசிரியராக பணிபுரிந்ததிலிருந்து எனக்கு தெரியும். காங்கேயம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட எந்தெந்த பகுதிகளில் சாமிதுரை ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்றால் காங்கேயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பணியாற்றி வந்தார் எந்தெந்த பகுதிகளில் பணியாற்றி வந்தார் என்பதை பற்றி என்னால் குறிப்பிட்ட சொல்ல முடியுமா என்றால், காங்கேயம் சுற்று வட்டார பகுதிகளில் அவர் பணிபுரிந்து வந்தது மட்டும்தான் எனக்கு தெரியும் சாமிதுரை காங்கேயம் சுற்றுவட்டார பகுதிகளில் பணிபுரிந்து வந்த பகுதிகளில் எனது சகோதரி ஜேன் எமிலியாவுடன் சேர்ந்து வசித்து வந்தாரா என்றால், என் சகோதரி போத்தனூரில் ஆசிரியராக பணிபுரிந்து வந்த காரணத்தினால் என் சகோதரியின் கணவர் சாமிதுரை போத்தனூர் வருவார்.

4. என் சகோதரி எந்த காலத்திலும் சாமிதுரையோடு சேர்ந்து காங்கேயம் சுற்றுவட்டார பகுதிகளில் வசித்து வரவில்லை என்றால், என் அக்கா அடிக்கடி இங்கு வந்து தனது கணவரை பார்த்து விட்டு செல்வார்.

சாமிதுரை என்பவருக்கும், ஜேன் எமிலியா என்பவருக்கும் எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்று சொன்னால் அது தவறு. வாதி தாக்கல் செய்துள்ள திருமண பதிவு பத்திரத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால், அப்போது நான் சிறுவனாக இருந்ததால் என்னிடம் கையெழுத்து கேட்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் ஆமாம்.

5. சாமிதுரை இறக்கும் சமயத்தில் எந்த முகவரியில் வசித்து வந்தார் என்றால் பழைய நீதிமன்றம், சாமி வீதி அருகே வசித்து வந்தார். கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது சாமி துறை எந்த தேதியில் இறந்தார் என்றால் 08.06.2019, சனிக்கிழமை அன்று இறந்தார், சாமிதுரை நல்ல நிலையில் இருந்து இறந்தாரா அல்லது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால், உடல்நிலை சரியில்லாமல் இறந்தார். சாமிதுரை உடல் நிலை சரியில்லாமல் இருந்த நிலையில் அவருக்கு நான் சிகிச்சை அளிக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால், அவர் போத்தனூருக்கு வரும்போது அவருக்கு நாங்கள் தகுந்த சிகிச்சை அளித்தோம்.

6. 2019 க்கு முன்பு நாங்கள் சாமி துறைக்கு சிகிச்சை ஏதேனும் அளித்தோமா என்றால் அவர் போதனூருக்கு வரும்போது சிகிச்சை அளித்தோம். சாமிதுரை போத்தனூருக்கு எந்த ஆண்டு வந்தார் என்றால் 2018 வரை எனக்கு தெரியும். நான் சொல்வது அனைத்தும் பொய் என்றும் ஜேன் எமிலியாவுக்கும், சாமிதுரைக்கும் திருமணம்

நடந்தது என்று நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. பாப்பாத்தி என்பவரை நான் எப்போது பார்த்தேன் என்றால் அது எனக்கு தெரியாது. பாப்பாத்தியும் சாமிதுரையும் எந்த உறவு முறையில் சேர்ந்து வசித்து வந்தார்கள் என்பதை பொறுத்து நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பாப்பாத்தி என்பவரை பொறுத்து எங்களுக்கு எதுவும் தெரியாது. அதை பொறுத்து என் அக்கா கணவர் சாமிதுரையும் எங்களுக்கு எதுவும் சொல்லவில்லை.

7. அவர் தங்கமானவர். பாப்பாத்தி என்பவர் சாமிதுரையை சட்டபூர்வமாக திருமணம் செய்து கொண்டு மனைவி என்ற உறவு முறையில் சாமிதுரை உடன் சேர்ந்து காங்கேயம் சுற்று வட்டார பகுதியில் தான் வசித்து வந்தார் என்று சொன்னால், இது தவறான கேள்வி. காங்கேயம் வட்டாட்சியரிடம் இருந்து பாப்பாத்தி என்பவர் சாமி துரையின் உண்மையான மனைவி என்று சாமிதுரையின் வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை அவர் பெற்றுள்ளாரா என்றால் அந்த விபரத்தை அறிந்த பின்பு தான் நாங்கள் இந்த நீதிமன்றத்தில் வழக்கு போட்டோம். வட்டாட்சியர் பாப்பாத்திக்கு சாமி துறையின் சட்டபூர்வமான மனைவி என்று ஆவணங்கள் வழங்கியது சம்பந்தமாக நாங்கள் இதுவரை ஆட்சேபனை ஏதேனும் தெரிவித்துள்ளோமா என்றால் தெரிவித்துள்ளோம்.

8. சாமிதுரையின் தந்தை மற்றும் தாயார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தந்தை பெயர் கனகராஜ் தாயார் பெயர் பொன்னம்மாள். சாமிதுரைக்கு எத்தனை சகோதர சகோதரிகள் என்றால் இரண்டு

சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். தற்போது சாமிதுரையில் இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரரும் உயிருடன் உள்ளார்கள் என்றால் ஆமாம். அவர்கள் யாரையாவது இந்த வழக்கில் நாங்கள் சாட்சியாக விசாரித்து உள்ளோமா என்றால் எங்களுக்கு அவசியம் இல்லை ஏற்கனவே சாமி துறையின் மனைவி என்றுபாப்பாத்தி என்பவருக்கு வாரிசு சான்றிதழ்களும், இறப்பு சான்றிதழும் கொடுத்துள்ள நிலையில் அதை ரத்து செய்துவிட்டு எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. ஜேன் எமிலியா என்பவருக்கும் சாமிதுரை என்பவருக்கும் சட்டபூர்வமாக திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றும் 1ம் பிரதிவாதி பாப்பாத்தி தான் சாமிதுரையின் சட்டபூர்வமான மனைவி என்றும் சொன்னால் சரியல்ல.

9. உண்மையிலேயே ஜேன் எமிலியா தான் சாமி துறையின் சட்டபூர்வமான மனைவி என்று நாங்கள் சொல்வது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அது குறித்து சாமிதுரையின் சகோதர சகோதரிகளையும் மற்றும் சாமிதுரை கடைசியாக வசித்து வந்த பகுதியில் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களையும் இந்த வழக்கில் நாங்கள் சாட்சியாக விசாரித்து இருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

10. சாமிதுரைக்கும் ஜேன் எமிலியா என்பவருக்கும் சட்டபூர்வமாக திருமணம் எதுவும் நடக்கவில்லை என்றும் ஜேன் எமிலியாவுக்கு இன்னொரு சாமிதுரையுடன் ஏற்பட்ட திருமணத்தை வைத்து பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி இந்த வழக்கில் கண்டுள்ள சாமிதுரையோடு

திருமணம் நடந்ததாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபன வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றும், இந்த வழக்கில் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். இந்த வழக்கு விவரங்களை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனது சகோதரியின் மகன் சொன்னார். வழக்கு விவரங்கள் தெரிய வந்ததற்கு பின்னிட்டு வழக்குரை நகலை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். அதில் பாப்பாத்தி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது சம்பந்தமாக எனது சகோதரி இடம் அதை பொறுத்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

2. அதற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால், தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. இந்த வழக்கில் கண்டுள்ள பாப்பாத்தி என்பவர் யார் என்பதை பொறுத்து நான் கடைசிவரை கேட்டு தெரிந்து கொள்ளவே இல்லையா என்றால் எனக்கு தேவையில்லை என்பதால் நான் அதைப் பொறுத்து கேட்கவில்லை. சாமிதுரை இறந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாமிதுரை இறப்பை பதிவு செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்தோமா என்றால் நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முன் சாமிதுரை இறப்புச் சான்றிதழில் என் சகோதரி பெயர் குறிப்பிடப்படாமல் பாப்பாத்தி என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததை அறிந்து கொண்டோம்.

3. சாமிதுரையின் இறப்பு சான்றிதழில் பாப்பாத்தி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது சம்பந்தமாக அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தோமா என்றால், என் சகோதரி மகன் இது சம்பந்தமாக நேரடியாக சென்று அரசு அலுவலர்களை பார்த்தபோது இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ள சொன்னார்கள். இது சம்பந்தமாக நாங்கள் மனு ஏதேனும் கொடுத்தோமோ என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தோம். அந்த மனு சம்பந்தப்பட்ட விசாரணை நிலுவையில் உள்ளதா என்றால், நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ள சொன்னார்கள்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.11 18:58:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்